**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**

**C.C. No. 17/2023.**

**வழக்கு சாட்சி – அ.சா. 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. ராஜதுரை. | ஜாதி | |
| தந்தை பெயர் | சங்கர். | தொழில் எலெக்ட்ரீசியன். | |
| கிராமம் | பங்களாமேடு. | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 29/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.01.2026.

**(எதிரி நீதிமன்றக் காவலில் இருந்து இன்று ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**<u>அரசுத் தரப்பு முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது, தேனி, பங்களாமேட்டில் குடியிருந்துகொண்டு, எலெக்ட்ரீசியன் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். கடந்த 04.10.2022 – ஆம்தேதி இரவு 09.40 மணியளவில் தேனி, பங்களா மேட்டிலிருந்து புதிய பேருந்து நிலையம் செல்லும் வழியில் உள்ள சிவாஜி நகர் போகும் வழியில், நான் சிறுநீர் கழிப்பதற்காக வண்டியை நிப்பாட்டிவிட்டு, போன் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது ஆஜர் எதிரி என்னிடம் போன் கேட்டார். நான் தருகிறேன் என்று சொன்னேன். அப்போது, எனது செல்பேனை பிடிங்கிக்கொண்டு, என்னை தேவிடியா மகனே, அவுசாரி மகனே என்று அசிங்கமாகப் பேசினார். அப்போது, ஆஜர் எதிரியுடன் இருந்த விமல் என்ற நபர் பாட்டிலால் என்னை அடித்தார். அதில் எனக்கு இடது கையில் இரத்தக் காயம் ஏற்பட்டது. அப்போது ஆஜர் எதிரி, எனது கழுத்தில் பிளேடை வைத்து கீறிவிட்டார். அப்போது அந்த வழியாக வந்த சித்துராஜ் மேற்படி இருவரையும் தடுத்தார். மேற்படி இருவரும் ஆள் வந்துவிட்டதால் தப்பிவிட்டாய் என்று மிரட்டி விட்டுச்

சென்றார்கள். **(விமல் என்ற நபர் இளவர் என்பதால் அவருக்குத் தனியாக குற்ற இறுதி அறிக்கை, இளஞ்சிறார் குழுமத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது).** பின்னர், நான் சிகிச்சைக்காக N.R.T. மருத்துவமனைக்குச் சென்றேன். அங்கு வந்த போலீசாரிடம் சம்பவம் குறித்து நடவடிக்கை எடுக்க நான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். தற்போது, என்னிடம் இந்நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். **அது அ.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது**.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2026.01.19 13:33:14 +0530

**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),**
**தேனி.**